**தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில்**
**மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் திரு க.அன்பழகன் அவர்கள்**
**புதுதில்லி, மத்திய திட்டக் குழுவில் 11.02.2008 அன்று**
**நடைபெற்றக் கூட்டத்தில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்**

மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகளே!

உங்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டிற்கான, 2008–2009ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை முடிவு செய்வதற்காக இங்கே வந்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

மத்திய மற்றும் மாநில அரசின் பதினோராவது திட்ட ஒதுக்கீடுகளை ஒப்பளிப்பு செய்த பின்னர் இந்த ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு முடிவு செய்யப்பட இருப்பதால் இந்தக் கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. பதினோராவது திட்டம் ரூ.85,344 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது பத்தாவது திட்ட ஒதுக்கீடான ரூ.40,000 கோடியைவிட இரண்டு மடங்கிற்கும் அதிகமாகும். சமூக நீதியுடன் கூடிய ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார வளர்ச்சியை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு முன்னேறி வருகிறது.

தற்போதுள்ள நிதி ஆதாரங்களைக் கணக்கில்கொண்டு, 2008–2009ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அளவினை ரூ15,500 கோடி என முன்மொழிந்துள்ளோம். பதினோராவது திட்டத்தினை செயல்படுத்துவதை விரைவுபடுத்துவதற்கு இந்த ஒதுக்கீட்டின் அளவினை மேலும் உயர்த்த வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். தமிழ்நாடு, ஒரு பெரிய திட்ட ஒதுக்கீட்டினை பெறுவதற்கு ஏதுவாக கூடுதல் மத்திய உதவியினை வழங்குமாறு மத்திய திட்டக் குழுவினை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இது சீரான வளர்ச்சிக்குத் திறவுகோலாக அமைவதோடல்லாமல், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடவும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிடவும் வழிவகுக்கும். 2008–2009ஆம் ஆண்டுத் திட்டத்தில் இத்துறைக்கு போதுமான அளவு நிதி

ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் ஆகிய திட்டங்களை அறிவித்த மத்திய திட்டக் குழுவினைப் பாராட்டும் அதேவேளையில், இத்திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விழைகின்றேன். வரையறுக்கப்பட்ட செலவினைத்திற்கும் கூடுதலாக மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படும் செலவுகள் மானியமாக அளிக்கப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

சிறப்பான நீர்பாசன மேலாண்மை, வேளாண் உற்பத்தி மற்றும் வேளாண் வருவாயில் முன்னேற்றம் ஆகியவற்றை அடைய தமிழ் நாடு நீர்வள நிலவளத் திட்டத்தினை (IAMWARM) எங்கள் மாநிலத்தில் 63 துணை வடிநீர் பகுதிகளில் செயல்படுத்தி வருகிறோம். தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தின் மாதிரியை பின்பற்றி மற்ற துணை வடிநீர் பகுதிகளில் செயல்படுத்த நாங்கள் கருதியுள்ளோம்.

மாநிலத்தில் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, குறிப்பாக ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்காக, நாங்கள் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறோம். மேலும், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைத் தடுப்பதற்காக, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் போன்றவற்றை நாங்கள் நியாயவிலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்து வருகிறோம். இம்முயற்சி மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க வழி வகுத்துள்ளது. இத்திட்டங்களை நாடு முழுவதும் மத்திய அரசு நடைமுறைப்படுத்தலாம் என்று கருதுகிறேன்.

கடந்தமுறை நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், முதல் கட்டமாக தீபகற்ப ஆறுகளை இணைப்பதற்கு ஏதுவாக 11வது திட்டத்திலேயே இத்திட்டத்தினைச் சேர்த்து அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டுமென்று நான் வலியுத்திக் கூறியிருந்தேன். ஆறுகளின் இணைப்புத் திட்டங்களை “தேசிய சொத்துக்கள்” என அறிவித்தும், 90 சதவீதம் மத்திய அரசின் நிதியுதவியுடன் அத்தகைய 14 திட்டங்களை செயல்படுத்தவும் மத்திய அரசு அறிவித்துள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைப்பதற்கும் அதிக அளவு நிதி தேவைப்படுகிறது. எனவே, தேசிய வளர்ச்சிக் குழுவின் 53வது கூட்டத்தில் ஏற்கனவே முடிவு செய்துள்ளபடி மாநிலத்தில் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களுக்கு விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசன பயனளிக்கும் திட்டத்தின்கீழ் (AIBP) மத்திய அரசு நிதி வழங்ககிட வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

தமிழக அரசு பொறுப்பேற்றவுடன், உடனடியாக அனைத்து வேளாண் கூட்டுறவுக் கடன்களையும் ரத்து செய்யும் ஒரு துணிச்சலான முடிவினை எடுத்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சிகளாலும், வெள்ளச் சேதங்களாலும் கடனை திருப்பிச் செலுத்த இயலாத விவசாயிகளுக்கு இந்த முடிவு உடனடி நிவாரணத்தை அளித்து, அவர்கள் மீண்டும் வங்கிக் கடன் பெற வழிவகுத்துள்ளது. கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்த செலவின் ஒரு பகுதியை, நாட்டில் குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட தொகுப்புச் சலுகைகளைப் போலக் கருதி, மத்திய அரசு ஏற்க வேண்டுமென நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

சமையலுக்கு விறகுகளை எரிபொருளாகப் பயன்படுத்தி துன்பங்களுக்கு ஆளாகும் ஏழைப் பெண்களின் சிரமங்களைக் குறைப்பதற்காக எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகளை இலவசமாக வழங்கும் ஒரு திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இது பெண்களுக்கு பெரிய அளவில் பயனளிக்கும் திட்டம் என்பதோடல்லாமல் சுற்றுச் சூழலுக்கும் நன்மையளிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, இத்திட்டம் மத்திய நிதியுதவி பெற உகந்ததாகும். தமிழக கிராமங்கள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களுக்கு ஏழைக் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்திற்கு ‘பாரத் நிர்மாண்’ திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, உயர்ந்த தரமான நகர்ப்பகுதி உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தமிழக அரசு முன்னுரிமை அளித்து

வருகிறது. சென்னை நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு புகழ்பெற்ற மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்தும் அறிவிப்பினை வெளியிட்டோம். இத்திட்டத்திற்கு முழு நிதியுதவி வழங்குவதற்கு மத்திய திட்டக்குழுவைக் கேட்டுக் கொள்ளும் அதே நேரத்தில், டெல்லி மெட்ரோ இரயில் திட்டத்திற்கு வழங்கப்பட்ட அதே சலுகைகள் இத்திட்டத்திற்கும் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

விழுப்புரம்–திண்டுக்கல் இரயில்பாதை தமிழ் நாட்டில் தென் மாவட்டங்களை இணைக்கும் முக்கிய இரயில் பாதையாகும். எனவே, தென் மாவட்டங்களுக்கு கூடுதல் இரயில்களை இயக்குவதற்கு ஏதுவாக இந்த பாதையை இருவழிப்பாதையாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கும்படி மத்திய அரசை நான் வலியுறுத்துகிறேன்.

இந்தியாவின் ஏற்றுமதிக்கும் பெரிய அளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், தமிழகத்தில் உள்ள தோல் மற்றும் நூற்பாலைகள் பெரிதும் பங்களித்து வருகின்றன. அவை மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்புடையவையாக இருந்தாலும் கூட, உலக அளவில் போட்டியிடத் தகுதி உடையனவாக இருக்க வேண்டும். எனவே, இந்தத் தொழிற்சாலைகளுக்கு கழிவு நீரை முற்றிலும் மாசற்றதாகச் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்க நிதியுதவி வழங்க வேண்டுமென்று மைய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை அறிவித்ததற்கு மத்திய அரசுக்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 'வட்டார மாதிரிப் பள்ளி' சமச்சீரான வளர்ச்சி என்ற குறிக்கோளை எய்துவதற்கு பெரிதும் துணைபுரியும். மாநில பாடத்திட்டத்தைப் பின்பற்றி வட்டார மாதிரிப் பள்ளிகளை அமைக்க மாநிலங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய நோய்களுக்கு, ஏழைமக்கள் தனியார் மருத்துவ வசதியை நாட இயலாது. எனவே, அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவனைகளை தரம் உயர்த்துவதன் மூலமாக இதுபோன்ற பெரிய நோய்களுக்கு இலவச மருத்துவ வசதியை அரசு தொடர்ந்து

வழங்க வேண்டும். தரமான மருத்துவ வசதி வழங்க, திட்டக்குழு மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்றினை தயாரித்து மாநில அரசிற்கு உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பான்மையான மத்திய திட்டங்கள் யாவும் அனைத்துவகையிலும் பின்தங்கிய மாநிலங்களை மனதில் கொண்டே உருவாக்கப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது மாநிலங்களுக்கிடையே சமவளர்ச்சி ஏற்படுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதை ஒத்துக் கொள்ளும் அதே வேளையில், மற்ற மாநிலங்களின் வளர்ச்சி விகிதம் தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டும் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தேவைக்கேற்ப மாற்றியமைக்கத்தக்க நடைமுறைகள் இருக்க வேண்டும். இது, மைய அரசின் உதவியினை மேலும் அர்த்தமுள்ளதாக மாற்றும். பதினோராவது திட்டத்திலேயே இத்தகைய மாற்றத்தினை அறிமுகப்படுத்தும்படி திட்டக் குழுவினை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி !

*****